செ.வெ.எண்.05 நாள்: 02.09.2021

மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் தூத்துக்குடி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்/மிகபிற்படுத்தப்பட்டோர் இன மாணவ/மாணவர்கள் விண்ணப்பித்து பயனடையலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

“மத்திய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடிமற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பயிலும் தமிழகத்தைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ,மாணவிகள் 2021-22ம் கல்வி ஆண்டிற்கான புதியது கல்வி உதவித்தொகை (FRESH APPLICATIONS) விண்ணப்பித்தல்”

தமிழ்நாடு மற்றும் பிறமாநிலங்களில் உள்ளமத்திய அரசுகல்விநிறுவனங்களான ஐஐடி,ஐஐஎம்,ஐஐஐடி,என்ஐடிமற்றும் மத்திய பல்கலைகழகங்களில் பட்டபடிப்புமற்றும் பட்டமேற்படிப்புபயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர்,மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ/மாணவிகளின் குடும்ப ஆண்டுவருமானம் ரூ.2.00 இலட்சத்திற்குமிகாமல் உள்ளமாணவ/மாணவியருக்கு கல்வி உதவித்தொகையாகமாணவர் ஒருவருக்குஆண்டிற்கு அதிகபட்சம் ரூ.2.00 இலட்சம் வரைவழங்குவதற்கு தமிழ்நாடுஅரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படிகல்விஉதவித்தொகைக்கு 2021-22ம் கல்வியாண்டில் புதியது (Fresh applications) விண்ணப்பிக்கவிரும்பும் தகுதியானமாணவர்கள் கீழ்கண்டமுகவரியிலுள்ள இயக்ககத்தையோ அல்லது தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலுள்ள மாவட்டபிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலஅலுவலர்களை அணுகியோ அல்லதுகீழ்குறிப்பிட்டுள்ளமின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பம் அனுப்பக்கோரி விண்ணப்பங்களைபெற்றுக் கொள்ளலாம்.

மேலும்,மேற்படி 2021-22ம் நிதியாண்டிற்கானபுதியது கல்விஉதவித்தொகை விண்ணப்பித்தினைமாணவர்கள் பூர்த்திசெய்து சம்பந்தப்பட்ட கல்விநிறுவனத்தில் சமர்ப்பிக்கவேண்டும். கல்விநிறுவனங்கள் தங்களது சான்றொப்பத்துடன் தகுதியான விண்ணப்பித்தினைபரிந்துரை செய்துகீழ்கண்டமுகவரிக்கு30.11.2021-க்குள் அனுப்பி வைக்கவேண்டும்˙ எனதெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இயக்குநர்,
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம்,எழிலகம் இணைப்புகட்டடம்,
2வது தளம்,சேப்பாக்கம், சென்னை-5
தொலைபேசி எண்.044-28551462
மின்னஞ்சல் முகவரி.tngovtiitscholarship@gmail.com

மேற்கண்ட விவரப்படி மத்திய அரசு கல்விநிறுவனங்களில் பயிலும் தூத்துக்குடி மாவட்ட பிற்படுத்தப்பட்டோர்/மிகபிற்படுத்தப்பட்டோர் இன மாணவ/மாணவர்கள் விண்ணப்பித்து பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.